இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 02-11-2024

# தேர்வே முறைகேடு!

“முறைகேடுகளைக் களைய நீட் தேர்வையே ஆன்லைனில் நடத்தலாம்” என்று, இதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு அறிக்கை அளித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி இருக்கிறது.

நீட் என்ற தேர்வே முறைகேடானது. முறைகேடான தேர்வை முறைகேடு இல்லாமல் எப்படி நடத்த முடியும்? அதுவும் ஆன்லைனில் நடத்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நேரடியாக வந்து தேர்வு எழுத வேண்டும் என்று சொல்லும் போதே வட மாநிலங்களில் ஆள் மாறாட்டம் செய்கிறார்கள். இதில் ஆன்லைனில் நடத்தினால், அவ்வளவுதான். அது ஆன்லைன் தேர்வாக இருக்காது. ஆள்மாறாட்டத் தேர்வாகத்தான் இருக்கும்.

**மருத்துவக் கல்விக் கனவோடு இருக்கும் மாணவர்களின் மருத்துவக் கனவைக் கலைத்து, சிலர் மட்டுமே உள்ளே போக முடியும் என்ற நிலைமையை உருவாக்குவதே நீட் தேர்வு ஆகும். மாநிலப் பாடத்திட்டத்தில் படித்தவர்கள், தாய்மொழியில் படித்தவர்கள் ஆகியோரை கோட்டுக்கு வெளியில் நிறுத்தும் தேர்வுதான் நீட் தேர்வு. சி.பி.எஸ்.இ. உள்ளிட்ட மற்ற பாடத்திட்டக் கல்வித் திட்டத்தில் படித்தவர்கள் அதிகம் உள்ளே நுழைய வசதியாக வினாத்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. பல்வேறு பாடத்திட்டங்களில் படித்த அனைவரையும் சமமாக நடத்தும் வகையில் வினாத்தாள் தயாரிக்கப்படுவது இல்லை. பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்ணையே மதிக்காத தேர்வு இது. பன்னிரண்டு ஆண்டுகள் படித்த கல்வியையே மதிக்காத தேர்வு இது. அதனால்தான் பத்தாம் வகுப்பில் இருந்து நீட் தேர்வுக்குப் படிப்பவர் தொகை அதிகமாகி வருகிறது.**

இதற்கான பயிற்சி மையங்கள், பள்ளிக்கூடங்களுக்கு இணையாகப் பரவி வருகின்றன. அவர்கள் வாங்கும் தொகையும், இதன் மூலமாக ஓராண்டுக்கு அந்த நிறுவனங்கள் ஈட்டும் தொகையும் மாநில அரசுகள், தங்களது துறைக்கு ஒதுக்கும் பணத்துக்கு இணையானவை. கோச்சிங் சென்டர்கள் கோடிகளைக் குவிக்கும் சென்டர்களாக வளர்ந்து வருகின்றன. இந்த கோச்சிங் சென்டர்களுக்குள் லட்சங்களைக் கட்டிச் செல்ல முடியாதவர்களின் மருத்துவக் கல்வி லட்சியங்களும் நிறைவேறாது என்பதே இப்போதைய நிலைமை.

இதனை இதற்கான புரோக்கர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். கேள்வித் தாள்களை லட்சங்களுக்கு விற்பது இதன் தொடக்கம். குறிப்பிட்ட சென்டர்களில் தேர்வு எழுதுபவர்களுக்கு விடைகள், வழங்கப்படுகின்றன. அவர்கள் மட்டும் மொத்தமாகத் தேர்ச்சி பெறுகிறார்கள். சொல்லிக் கொடுத்தும் எழுதத் தெரியாதவர்களாக இருந்தால், ஆள் மாறாட்டம் செய்து வேறு ஆட்களை வைத்து தேர்வே எழுத வைக்கலாம். இவை அனைத்தும் வட மாநிலங்களில் மிகமிக எளிதில் செய்ய முடியும் காரியங்கள்.

**இங்கே உள்ளாடைகளைக் களைந்தும், தலை கிளிப்பை அகற்றியும், கம்மலைக் கழற்றியும் சோதனை போடும், இந்த தேர்வு மையத்தினர், வட மாநிலங்களில் யார் யாரோ தேர்வு எழுதினாலும் கண்டுகொள்ள மாட்டார்கள். இவை அனைத்தும் ஏழு வட மாநிலங்களில் நடந்த, நடக்கும் முறைகேடுதான். இவை அனைத்தும் ஏதோ அரசியல் உள்நோக்கம் கொண்ட குற்றச்சாட்டுகள் அல்ல. சி.பி.ஐ. அமைப்பால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட கிரிமினல் குற்றச்சாட்டுகள்தான்.**

இத்தகைய மோசடித்தனமான - முறைகேடான ஒரு தேர்வை எதற்காக நடத்த வேண்டும்? மருத்துவக் கல்வியைக் காக்கவா? இல்லை. பல்லாயிரம் கோடிப் பணத்தை ஆண்டுதோறும் குவித்துவரும் கோச்சிங் சென்டர்களைக் காப்பாற்றுவதற்காக நடத்துகிறார்கள். அதனால்தான் எத்தனை குற்றச்சாட்டுகள் வெளியாகி, பா.ஜ.க. ஆட்சியே அசிங்கமானாலும் பரவாயில்லை என்று நினைத்து வெட்கமில்லாமல் நீட் தேர்வை நடத்திவருகிறார்கள். ‘பேர் கெட்டாலும் பரவாயில்லை, பணம் வந்தால் போதும்’ என்பதே அவர்களது எண்ணமாக இருக்கிறது.

**உச்சநீதிமன்றம் உச்சந்தலையில் கொட்டியபிறகும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தேர்வை நடத்துவதற்கு பல்வேறு குட்டிக்கரணங்களைப் போடுகிறார்கள். அதில் ஒன்றுதான் இந்த உயர்மட்டக் குழு ஆகும். இத்தேர்வுகளை நடத்தும் தேர்வு முகமை நம்பகத்தன்மை இழந்த அமைப்பாக இருக்கிறது. இதனை முதலில் கலைத்தாக வேண்டும். அதை விட்டுவிட்டு, இதுபோன்ற உயர்மட்டக் குழு நாடகங்களை நடத்தக் கூடாது.**

‘இஸ்ரோ’ முன்னாள் தலைவர் ராதாகிருஷ்ணன் தலைமையில் 7 பேர் கொண்ட குழுவை அமைத்தார்கள். இந்தக் குழு செய்துள்ள பரிந்துரைகளில்சில; ஊடகங்களில் வெளியாகி இருக்கிறது. “நேரடியாகத் தேர்வு எழுதுவதைத் தவிர்த்து, ‘நீட்’ உள்ளிட்ட அனைத்துத் தேர்வுகளும் முழுமையாக ஆன்லைனில் நடத்தப்பட வேண்டும். ஆன்லைனில் தேர்வு நடத்த முற்றிலும் சாத்தியமில்லாத பகுதிகளில், ‘ஹைபிரிட்’ முறையில் தேர்வை நடத்தலாம். அதாவது வினாத்தாள்களை டிஜிட்டல் முறையில் அனுப்பி, விடைகளை ஓ.எம்.ஆர். ஷீட்டில் குறிக்க வைக்கலாம்” என்று சொல்லப்பட்டுள்ளதாம். இவை இன்னும் அதிகமான முறைகேடுக்குத்தான் வழிவகுக்கும். ஆள்மாறாட்டக் கோஷ்டிக்குத்தான் இது அதிகமான பயனளிக்கும். ஒரே சென்டரில் படித்து, ஒரே தேர்வுமையத்தில் எழுதுபவர்களுக்குத்தான் இது பயனுள்ளதாக இருக்கும்.

அதைவிட இன்னும் ஆபத்தான இன்னொரு ஆலோசனையையும் இக்குழு சொல்லி இருக்கிறது. “அதிகம் பேர் ‘நீட்’ தேர்வை எழுதுவதால் ஜே.இ.இ. போல தகுதித் தேர்வு, மெயின் தேர்வு என ஒன்றுக்கும் மேற்பட்ட தேர்வுகளை நடத்தலாம்” என்று சொல்லி இருக்கிறது இக்குழு. ஏன் இரண்டு தேர்வுகளை நடத்த வேண்டும்? 12 விதமான தேர்வுகளை நடத்தலாமே? கோச்சிங் சென்டர்களும் லட்சங்கோடிகளைக் குவிக்கலாமே?

நீட் என்ற தேர்வே முறைகேடானது. அதனை ஒன்றிய அரசு நீக்காத வரை முறைகேடுகளுக்குத் துணைபோகும் அரசாகவே அது அடையாளப்படுத்தப்படும்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 30.10.2024 அன்று தேனாம்பேட்டை டி.எம்.எஸ் வளாகத்தில், செயல்பட்டு வரும் 108 அவசரகால மேலாண்மை மையத்தில் (108 Emergency Response Center), தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு முன் ஏற்பாடு பணிகளை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 108 அவசரகால மேலாண்மை மையத்தில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

## பண்டிகை நேரத்தில் விபத்துகளைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொண்டார்!

**சென்னை, நவ.2-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேனாம்பேட்டை டி.எம்.எஸ் வளாகத்தில் செயல்பட்டு வரும் 108 அவசரகால மேலாண்மை மையத்தில் (108 Emergency Response Center), தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மேற்கொள்ளப் பட்டுள்ள சிறப்பு முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 30.10.2024 அன்று தேனாம் பேட்டை டி.எம்.எஸ் வளாகத்தில் செயல்பட்டு வரும் 108 அவசரகால மேலாண்மை மையத்தில் (108 Emergency Response Center), தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்விற்கு பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தீபாவளி நேரத்தில் விபத்துக்களை தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக, 108 அவசர கால சேவை மையத்திற்கு ஒரு நாளைக்கு சராசரியாக 12 ஆயிரம் அழைப்புகள் வருவது வழக்கம். ஆனால், தீபாவளி நேரம் என்பதால், தீபாவளிக்கு முதல் நாள் இன்றும், நாளை தீபாவளியன்றும் 20 ஆயிரம் அழைப்புகள், அதாவது 60 சதவீதம் அளவுக்கு அதிகமான அழைப்புகள் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்காக, Emergency Management Centerல் 3 shiftலும், கூடுதலாக, 50 பேர் பணி அமர்த்தப்பட்டு, மொத்தம் 194 நபர்கள் அழைப்புகளை ஏற்கும் வகையில் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, வழக்கத்தை விட கூடுதலாக தீக்காயங்களும் மற்றும் சாலை விபத்துகளும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதற்காக ஏற்கனவே கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் தீ விபத்து (FIRE ACCIDENT) நோயாளிகளை எதிர்கொள்ள 75 படுக்கை வசதி கொண்ட ஸ்பெசல் வார்டு உள்ளது.

நேற்று நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தீபாவளி தீக்காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கூடுதலாக 25 படுக்கைகள் கொண்ட கூடுதலாக ஒரு ஸ்பெசல் வார்டினை திறந்து வைத்துள்ளார்.

**பயிற்சிகள் வழங்கல்!**

எனவே, தீபாவளி தீக்காயங் களை எதிர்கொள்ள ஏதுவாக, ஆம்புலன்ஸ் ஓட்டுனர்கள், அவசரகால மருத்துவ உதவியாளர்கள் மற்றும் அவசரகால மேலாண்மை மையத்தில் பணிபுரிபவர்களுக்குத் தேவையான அறிவுரைகளும், பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நேரத்தில், சென்னை மற்றும் புதுக்கோட்டை அவசரகால மேலாண்மை மையங்கள் இணைந்து செயல்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஆம்புலன்ஸ்கள் தடையின்றி இயங்க முதல்வர் உத்தரவு!**

இந்த 3 நாட்களுக்கும் தடையின்றி ஆம்புலன்ஸ்களை இயக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில், விபத்து நடக்கக்கூடிய பகுதிகள் என்று அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் ஆம்புலன்ஸ் வாகனங்கள் ஏற்கனவே தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும், 108 அவசரகால மேலாண்மை மையத்தை அழைக்க பிரத்தியேகமாக (EXCLUSIVE NUMBER) 044 4000 0108 என்ற எண் வழங்கப்பட்டு இருக்கின்றது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், கடந்த 4 ஆண்டுகளாக தீபாவளி பண்டிகையன்று காலை 6 மணி முதல் 7 மணி வரையும், இரவு 7 மணி முதல் 8 மணி வரை மட்டுமே அதிக சத்தம் எழுப்பக் கூடிய பட்டாசுகளை வெடிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு நேரம் நிர்ணயம் செய்து இருக்கின்றது.

இதனை இந்தாண்டும் பொதுமக்கள் பின்பற்றிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். மேலும், அரசு வெளியிட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி, பாதுகாப்புடனும், பத்திரமாகவும் தீபாவளியை கொண்டாடுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பசும்பொன்னில் தேவர் அரங்கம்!

# முதல்வருக்கு பார்வர்ட் பிளாக் நன்றி!

## பொதுச் செயலாளர் எஸ்.தினகரன் அறிக்கை!

*மதுரை, நவ. 2 -*

*பசும்பொன்னில் தேவர் அரங்கம் அமைத்துக் கொடுத்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு அகில இந்திய பார்வர்ட் பிளாக் எஸ்.தினகரன் பிரிவு நன்றி தெரிவித்துள்ளது.*

*இதுகுறித்து இக்கட்சியின் மாநில பொதுச் செயலாளர் எஸ்.தினகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*மக்கள் கோரிக்கையை ஏற்று பசும்பொன் கிராமத்தில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் சுமார் ஒரு கோடியே ஐம்பத்தைந்து லட்சத்தில் தேவர் அரங்கமும் தற்காலிக பந்தலுக்கு பதிலாக நிரந்தர செட் தமிழக அரசு சார்பில் அமைத்து கொடுத்த தமிழக முதல்வருக்கு அகில இந்திய பார்வர்ட் பிளாக் தினகரன் பிரிவு சார்பில் நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.*

**மூக்கையா தேவர் சிலை!**

*இதேபோல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் அரசியல் வாரிசாக அறியப்படும் மூக்கையா தேவரின் உருவச்சிலைகள் மதுரை சோழ வந்தான் சின்னமனூர் பாப்பாபட்டி ஆகிய இடங்களில் உள்ளன.*

*இவைகள் மோசமான நிலையில் சிதைந்து காணப்படுகிறது.*

*இவைகளை செப்பனிட்டு மராமத்து பணிகள் செய்து புதுப்பொலிவுடன் காண முதல்வர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.*

*இவ்வாறு அகில இந்திய பார்வர்ட் பிளாக் தினகரன் பிரிவு மாநில பொதுச் செயலாளர் எஸ்.தினகரன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*

### தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தொடர் விழிப்புணர்வால்

# சென்னையில் காற்று மாசுபாடு குறைந்தது!

*சென்னை, நவ. 2 -*

*சென்னையில் சென்ற ஆண்டு தீபஒளி காற்றுத் தர மாசுபாட்டின் அளவை விட நடப்பாண்டு தீபஒளி கால காற்றின் மாசு குறைந்துள்ள தாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. ஆலந்தூரில் காற்றின் தரக் குறியீடு கடந்தா ண்டு 230 ஆக இருந்த நிலையில், இந்தாண்டு 222 ஆக பதிவாகியுள்ளது. அரும்பாக்கத்தில் காற்றின் தரக்குறியீடு கடந்தாண்டு 251 ஆக பதிவானது. இந்தாணடு 168 ஆக குறைந்தது. சென்னை கொடுங்கையூரில் கடந்தாண்டு காற்றின் தரக்குறியீடு 124 ஆக இருந்த நிலையில், நடப்பாண்டில் 106 ஆக குறைந்தது. சென்னை ராயபுரத்தில் கடந்தாண்டு காற்றின் தரக்குறியீடு 242 ஆக பதிவான நிலையில், இந்தாண்டு வெகுவாக குறைந்து 87 ஆக பதிவானது. சென்னை மணலியில் கடந்தாண்டு காற்று மாசு 313 ஆக பதிவானது. இந்தாண்டு 113 என்ற அளவில் குறைந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது.*

*தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணைந்து மாவட்ட ஆட்சியாளர்கள், மாநகராட்சி காவல்துறை, பள்ளிக் கல்லூரி மாணவர்கள் மேற்கொண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலமாக பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.*

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; “அர்பன் நக்சல்களின் முகத்திரையைக் கிழிக்க வேண்டும்” என்று பிரதமர் மோடி பேசி இருக்கிறாரே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; தேசப்பற்று மிக்க, சமூகப் பிரக்ஞை உள்ள, சுதந்திரமான சிந்தனையாளர்கள் மற்றும் செயல்பாட்டாளர்களைத்தான் “அர்பன் நக்சல்கள்” என்று கூறியிருக்கிறார்.**

**கௌரி லங்கேஷ், வரவர ராவ், ஸ்டேன் சுவாமி, சாய்பாபா போன்ற பலரையும் அர்பன் நக்சல்கள் என்று முத்திரை குத்தியே முகத்திரையைக் கிழிப்பதாகச் சொல்லி, தீர்த்துக் கட்டிவிட்டார்கள்.**

**இப்படி இன்னும் யார் யாரைக் குறி வைத்திருக்கிறார்களோ தெரியவில்லையே !**

**மொத்தத்தில் பா.ஜ.க.வின் பிற்போக்குச் சித்தாந்தங்களுக்கு எதிரானவர்களை எல்லாம் “அர்பன் நக்சல்கள்” என்று சொல்லுபவர்களைக் “காவி நக்சல்கள்” என்று திருப்பிச் சொல்ல எவ்வளவு நேரம் ஆகும் ?**

**சுதந்திரமான கருத்துரிமை, எழுத்துரிமை உறுதிசெய்யப்பட்டுள்ள நாட்டில், வேண்டாதவர்களை “ நக்சல்கள்” என்று முத்திரை குத்துவது, ஜனநாயகத்தைச் செழிக்கச் செய்ய உதவாது !**